பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.674 **நாள்: 13.11.2026**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கேக் மற்றும் வாழ்த்து அட்டைகளை வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் குழந்தைகள் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக, அவரின் பிறந்த நாளான நவம்பர் 14ஆம் நாள் குழந்தைகள் தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

அதனையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இன்று (13.11.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், கபிலர் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கேக் மற்றும் வாழ்த்து அட்டைகளை வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ஜே.சி.டி.பிரபாகர் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-113க்குட்பட்ட இராமா தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கேக், வாழ்த்து அட்டைகள் மற்றும் பரிசுப்பொருட்களை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு.எ.ன்.ஆனந்த் அவர்கள், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், இரங்கராஜபுரம் பிரதான சாலையில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளி மற்றும் சென்னை உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கேக் மற்றும் வாழ்த்து அட்டைகளையும், இப்பள்ளியின் அருகிலுள்ள குழந்தைகள் மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கியும் வாழ்த்துகளைத் தெரிவித்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா அவர்கள், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் மண்டலம், வார்டு-98க்குட்பட்ட அயனாவரம், பழவோயில் சாலையில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கேக், வாழ்த்து அட்டைகள் மற்றும்

எழுதுப்பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ப.வெங்கடரமணன் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-122க்குட்பட்ட நந்தனம், அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கேக், வாழ்த்து அட்டைகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் முனைவர் நெ. மரியவில்சன் அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-42க்குட்பட்ட சேனியம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கேக் மற்றும் வாழ்த்து அட்டைகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சிகளில், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எஸ்.மாலதி ஹெலன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் , கல்வி அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.